## தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சிக்கும்

# ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு முதல்வரின் அடுக்கடுக்கான கேள்விகள்!




# பெரம்பலூரில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படுமா?

## சட்டப்பேரவையில் ம.பிரபாகரன் கேள்வி!

சென்னை, அக். 20- சட்டப் பேரவையில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் கே.என்.நேரு அளித்த பதிலும் வருமாறு:-



**ம. பிரபாகரன்:** தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெரம்பலூர் நகராட்சியில் பல்வேறு சாலை வசதிகள், சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள், காய்கறி மார்க்கெட்டிற்கு புதிய கட்டடம், புதிய பேருந்து நிலையத்திற்கு விரிவாக்கக் கட்டடம், மாநகராட்சி அறிவிப்பு என பல்வேறு பணிகளைச் செய்து தந்திருக்கின்ற நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரம்பலூர் பழைய பேருந்து நிலையம் காமராஜர் காலத்தில் கட்டப்பட்டது. 1960 ஆம் ஆண்டு கட்டப்பட்ட அந்தப் பழைய கட்டடத்தை இடித்துவிட்டு, புதிய பேருந்து நிலையம் கட்டித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் கே.என். நேரு:** ஏற்கெனவே கடந்த ஆண்டு சட்டமன்றக் கூட்டத் தொடரில் சொல்லியதையடுத்து விரிவான திட்ட அறிக்கை அதற்காக தயாரிக்கப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வரப்பெற்றவுடன், நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து ஆலோசனை செய்து பழைய பேருந்து நிலையத்தை இடித்துவிட்டு புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

## மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்றச் சங்க நிர்வாகிகள் தேர்தல் அட்டவணை நிறுத்தி வைப்பு!

### தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 605/MDS, பேரவை இணைப்பு எண். 287) நிர்வாகிகள் தேர்தல் நடத்துவது தொடர்பான தேர்தல் அறிவிப்பு அட்டவணை 11.10.2025ம் தேதி வெளியிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், கடந்த மார்ச் மாதத்தில் பெறப்பட்ட வேட்பு மனு தாக்கல் செய்தவர்களில் சிலர் இறப்பு, பணி ஓய்வு, இடமாற்றம் காரணமாக போட்டியிட விரும்பிய பொறுப்புகளுக்கு போட்டியிட வாய்ப்பில்லாததாலும் நிர்வாகத்தால் சில பணிமனைகள் நிறுத்தப்பட்டு பணியாளர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாலும், இவைகளை சரிசெய்து திருத்தப்பட்ட புதிய வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட வேண்டியது அவசியமாகிறது.

எனவே, திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் அடிப்படையில், புதிய வேட்புமனுக்கள் பெறப்பட்டு தேர்தல் நடத்தப்பட வேண்டியுள்ளதால், ஏற்கனவே வெளிவந்துள்ள தேர்தல் தொடர்பான 11.10.2025ம் தேதியிட்ட அறிவிப்பு இரத்துச் செய்யப்படுகிறது. புதிய தேர்தல் அறிவிப்பு அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும்.

"கலைஞரகம்"
சென்னை - 17
நாள் : 18 - 10 - 2025

**மு.சண்முகம்**
பொதுச்செயலாளர்
தொ.மு.ச. பேரவை



கோவை ஜிஆர்டி கல்லூரி, ஆர்.வி.எஸ். பொறியியல் மற்றும் கலைக்கல்லூரி தி.மு.கழகத்தின் தமிழ் மாணவர் மன்ற மாணவர்களை கல்லூரி வாயிலில் சந்தித்து கழகத்தின் சாதனைகளை விளக்கியும், மாணவர் மன்ற முன்னெடுப்புகள் குறித்தும் கழக மாணவர் அணி செயலாளர், வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி தலைமையில் ஆலோசனை மேற்கொண்டனர். இதில் கழக மாணவர் அணி துணைச் செயலாளர் வி.ஜி.கோகுல், மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர்கள் சூலூர் பிரபு, சிவப்பிரகாஷ், அந்தோணி ராஜ், தமிழ் மாணவர் மன்ற பொறுப்பாளர் விஜயராகவன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# பாபநாசத்தில் 'நலம் காக்கும் ஸ்டாலின்' மருத்துவ முகாம்!

## மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

தஞ்சாவூர், அக். 20 - தஞ்சை வடக்கு மாவட்டம் பாபநாசத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமில் மாவட்டக் கழகப் பொறுப்பாளரும் சட்டமன்ற உறுப்பினருமான சாக்கோட்டை க.அன்பழகன் தொடங்கி வைத்தார்.

இது பற்றி விவரம் வருமாறு:-

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் நடைபெற்றது.

இந்த முகாமை தஞ்சை வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்.

முகாமில் வட்டார மருத்துவ அலுவலர் க. ஜெகன்நாத் தலைமையிலான மருத்துவ குழுவினர் சர்க்கரை, எக்கோ, ஈசிஜி, ஸ்கேன், தோல், இதயம், கண் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு 19 சிறப்பு மருத்துவர்கள், பங்கேற்று பயனாளிகளுக்கு சிகிச்சை அளித்தனர்.

மேலும், சிகிச்சை பெற்றவர்களுக்கு மேல் சிகிச்சைக்காக, தஞ்சாவூர் மருத்துவமனை மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் மாவட்ட கழக நிர்வாகிகள் கோவி. அயாராசு, எஸ்.துரைமுருகன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் கோ.தாமரைச்செல்வன், என்.நாசர், உள்ளூர் தி.கணேசன், ஜெ.சுதாகர், பேரூர் கழக செயலாளர் ச.கபிலன்,

பேரூராட்சி மன்ற தலைவர் பூங்குழலி கபிலன், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் கே.எஸ்.செல்வமுத்துக்குமரன், பாவை ஹனிபா உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், மருத்துவ துறை அதிகாரிகள், கழக முன்னோடிகள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## விடுமுறை அறிவிப்பு

இன்று(20.10.2025 - திங்கட்கிழமை) முரசொலி அலுவலகத்திற்கு விடுமுறை. முரசொலியின் அடுத்த இதழ் நாளை மறுநாள் (22.10.2025 - புதன் கிழமை) வழக்கம் போல் வெளிவரும்.

**தலைமை நிர்வாகி**
**முரசொலி**



தமிழ்நாடு உதவிக்கரம் மாற்றுத் திறனாளர் நல்வாழ்வு சங்கம் சார்பில்,சென்னை சாலிகிராமத்தில் நடைபெற்ற 'மாற்றுத் திறனாளர்களுடன் பண்டிகைக் கொண்டாட்டம்' நிகழ்ச்சியில், மாற்றுத் திறனாளர்களுக்கு புத்தாடை, ரொக்கப் பரிசு, அரிசி,இனிப்பு, பட்டாசு உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை, தி.மு.க. மாற்றுத் திறனாளிகள் அணி மாநிலத் தலைவர் ரெ.தங்கம் வழங்கினார்.இதில் மாற்றுத் திறனாளிகளுக்கான சென்னை சாய் துணை மேட்ரிமோனியல்ஸ் அமைப்பின் நிறுவனத் தலைவர் முனைவர் என். பஞ்சாபகேசன்,தமிழ்நாடு உதவிக்கரம் மாற்றுத் திறனாளர் நல்வாழ்வு சங்க மாநில தலைவர் டி.ஏ.பி. வரதகுட்டி, மாநில பொதுச் செயலாளர் அரிமா டாக்டர் ஆவின் கி. கோபிநாத், மாநிலப் பொருளாளர் நந்தகுமார், டாக்டர் எம். ஜி. ஆர். காது கேளாதோர் சிறப்புப் பள்ளியின் முதல்வர் லதா ராஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.